செய்தி வெளியீடு எண்:696 நாள்: 17.10.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, கோபாலபுரம் அமுதம் நியாய விலை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடி ஆகியவற்றில் இன்று (17.10.2017) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மானிய விலையில் வழங்கப்படும் சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பருப்பு, பாமாயில் ஆகியவை உணவு பொருள் வழங்கல் துறை ஆணையரின் மாத ஒதுக்கீட்டின்படி, கிடங்கிலிருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டிருப்பதையும், அங்காடிகளில் போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதையும் மாண்புமிகு அமைச்சர் ஆய்வின் போது உறுதி செய்தார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு. அரிசி 98%, சர்க்கரை 98%, கோதுமை 97%, பருப்பு 96%, பாமாயில் 96%மும் கடைகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனையாகி வருகிறது. இதுபோக மேலும், கிடங்குகளில் அத்தியாவசியப் பொருட்கள் தேவையான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், அரிசி 1,17,262 மெ.டன்னும், சர்க்கரை 40,063 மெ.டன்னும், கோதுமை 9,989 மெ.டன்னும், பருப்பு 11,085 மெ.டன்னும்,

பாமாயில் 35,60,817பாக்கெட்டுகளும் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார். நியாய விலை அங்காடிகள் ஆய்வின்போது, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா என்பதைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், நியாய விலை அங்காடிகள் மூலம் தரமான பொருட்கள் சரியான எடையுடன் சீரான முறையில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாய்வின்போது கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**